News
aperin Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு புரட்டாதி மீ உகஉ (1947 ஒக்டோபர் 17 வெள்ளிக்கிழமை) [இல ருச

## அன்னை புவனேசுவரி

### படைத்துக் காத்து அழிக்கும் பராசக்தி

### வடிவம்மூன்று; ஆனல் பொருள் ஒன்று

( மகாகவி பாரதியார் )



ஒவ்வொருவனுக்கும் மூன்று வித சக்தி வேண்டும்.

அறிவு செல்வம், தைரியம் இந்த மூன்றும் நமக்கு இகலோகத்திலே கிடைக்கும்படியாகவும், இதனல் பரலோக இன்பங்களும் சாத்தியமாகும்படியாகவும், நாம் தெய்வத்தை வழிபடுகிறோம். முக்திக்கு மாத்திரமே தெய்வத்தை நம்புவது சிலருடைய வழி: இகலோக இன்பங்களுக்கும் தெய்வமே துணை என்று நம்பி, இன்பங்கள் வேண்டுமென்று தெய்வத்திடம் கேட்டு வாங்கிக் கொள்வது மற்றொரு வழி. சுந்தரமூர்த்தி நாயனருக்குப் பரமசிவன் என்னென்ன வெல்லாம் செய்தார்? அர்ச்சுனன் தனக்கு சுபத்திரையை வசப்படுத்திக் கொடுக்கும்படி யாரிடத்தில் கேட்டான்? ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலே கேட்டான். ஸ்ரீ கிருஷ்ணன் சுபத்திரையைக் கவர்ந்து செல்வதற்குவேண்டிய உபாயங்கள், காட்டினுர். ஆம், தெய்வம் எல்லாம் செய்யும்.

இகலோகத்திலே எல்லாவிதமான இன்பங்களும் நமக்கு வேண்டும். அவற்றை வசமாக்குவதற்கு அவசியமான அறிவுத் திறனை நமக்குத் தரும்படி தெய்வத்தைக் கேட்கிறோம். "தெய்வமே நான் தூங்குகிறேன். நீ எனக்கு மாம்பழம் கொடு" என்று கேட்கவில்லை. "தெய்வமே! தெய்வமே! மாம்பழ விஷயத்தில் எனக்கு இத்தனை ருசி ஏற்படுத்திக் கொடுத்த தெய்வமே, உனக்குப் புண்ணியமுண்டு! மாவிதை எங்கே அகப்படும்? ஒட்டு மாஞ்செடி எப்படி வளர்ப்பது? சொல்லு. பாடுபடச் சம்மதம். ஆனல் மாம்பழம் கொடுத்துத் தீரவேண்டும். நீதானே இந்த ருசியை ஏற்படுத்தினுய்?" என்று கேட்கிறோம். இது நியாயமான கேள்வி. தெய்வம் உதவி செய்யும்.

விக்ரமாதித்தன் வணங்கிய தெய்வம்; காளிதாசனுக்கும் கம்பனுக்கும் கவிதை காட்டிய தெய்வம்; பாரதநாட்டு மகாஜனங்கள் இன்னும தலைமையாகக் கொண்டாடும் தெய்வம். ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் சக்தியாக விளங்கும் இலக்குமி தேவதை; சிவபிரானுடைய வலிமையாகத் திகழும் பார்வதி; பிரமதேவன் தலைவியாகிய சரசுவதி: மூன்று மூர்த்திகள்; மூன்று வடிவங்கள்; பொருள் ஒன்று. அதன் சக்தி ஒன்று. பொருளும் அதன் சக்தியும் ஒன்றே, இங்ஙனம் ஒன்றாக விளங்கும் சக்தி என்ற தெய்வத்தை இந்துக்கள் உபாசனை செய்வதற்கு விசேடப் பருவமாக இந்த நவராத்திரியின் காலத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன?

பராசக்தி மனமுவந்தருள்புரியும் சரத்காலத்தின் ஆரம்பமென்று கருதியோ? சரத் காலம நம்நாட்டில் ஒன்றுபோல எல்லாப் பகுதிகளிலும் தொடங்கவில்லை யாயினும், ஓர் இடத்திலே தோன்றிய திருவிழா நாடுமுழுவதும் பரவியிருக்கலாம.

'மகாளய அமாவாசை' என்பது யோகானுபவத்தில் மரணத்திற்குப் பெயர். அதைத் தப்பிப் புதிய உயிர் கொண்டவுடன், சேர்ந்தபடியாகப் பலநாள் பராசக்தியை இடைவிடாமல் உபாசனைசெய்யவேண்டுமென்ற கொள்கையின் அறிகுறியாக இருக்கலாம்.

கும்பகோணம் சங்கராச்சாரிய மடத்திலிருந்து பத்திரிகைகளுக்கு வந்த தந்தியொன்றிலே நவராத்திரி பூஜைக்குப் புராணப்படி முகாந்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. நவராத்ரி காலத்தில் தேவி (யோகமாயை) இலக்குமி, சரசுவதி, துர்க்கை என்று மூன்று விதமாக அவதாரம் செய்து பல அசுரர்களை அழித்ததாகவும், அது முதல் வருடந்தோறும் நமது தேசத்தில் இந்தத் திருவிழா நடந்து வருவதாகவும் மடத்தார் தந்தியில் விளக்கப்பட்டிருக்கிறது. இது புராண ஐதிகம். இதற்குப் பொருள்

அத்யாத்மம் |பராசக்தி எங்கும் இருக்கிருள். எப்போதும் அவள் இருக்கிருள். தொழிலே உலகம். அவளே உலகம். குழந்தைகளும் சாமான்ய ஜனங்களும் அவளைச் சிலையென்று நினைக்கிருர்கள். அவள் சிலையில்லை. உண்மை ஒளி. அது கோயிற் புறத்திலே மாத்திரம் இல்லை.

அகத்திலு மிருக்கிறது. கடலை அசைப்பது; பாதாளத்தின் கீழே மற்ருெரு பாதாளம்; அதன் கீழே ஒன்று, அதன் கீழே ஒன்ருக எல்லையின்றிப் பரந்த திசை முழுவதையும் கவர்ந்தது

எப்படிப் பார்த்தாலும் ஆரம்பமில்லாமலும், எப்படிப் பார்த்தாலும் முடிவில்லாமலும் இருக்கும் அற்புத வஸ்து.

கோடானு கோடி அண்டங்களை ஒரு சிறு மூக்கினுல் உடைப்பது.

ஒரு சிறிய மலரின் இதழிலே வர்ணங் [illegible] டங்கள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரார்த்தனை

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி. செழுங்கமலக் கையாய், செய்ய
விமலை,பசுங் சழை தழைக்கும் வேனிலான் றனையீன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய், பாறகடலு ளவதரித்தேய் அனபர் நெஞ்சத்
திமிரமகன்றிடவொளிருஞ்செழுஞ்சுடரே யென வணக்கஞ் செய்வான்மன்னே

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரும் எழின்மேனித் திருவே, வேலை
அங்கணுல கிருள் துரக்கு மலர்க்கதிராய், வெண்மதியாய், அமரர்க் கூட்டும்
பொங்கழலா ய் உலகளிக்கும்பூங்கொடியே,நெடுங்கானிற்பொருப்பின்மண்ணில்
எங்குளை நீ யவணன்றோ மல்லல்வளஞ் சிறந்தோங்கி யிருப்ப தம்மா!

— அதிவீரராமபாண்டியன்.

## பலஸ்தீனப் 'பிரிவினை

### ருஷியாவும் சம்மதம்

சென்ற திங்கட்கிழமை ருஷியாவும், பலஸ்தீனப் பிரச்னை விஷயமாகத் தனது அபிப்பிராயத்தை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற் சொல்லி விட்டது,

பலஸ்தீனம் யூதர், அராபியர் என்னும் இருசாரார்க்கும் உரியது ஒரு வகுப்பார் மாத்திரம் ஏகபோக உரிமை பாராட்டக்கூடாது. ஆகவே இந்த இரு சாராரும் சமரசமாகப் பலஸ்தீனத்தில் வாழ ஒழுங்குகள் செய்ய வேண்டும்: அதற்குச் சிறந்த மார்க்கம் அந்நாட்டைப் பிரிவினை செய்வதே என்று ருஷியப் பிரதிநிதி கூறினுர்.

இதனைக் கேட்ட எகிப்தியப் பிரதிநிதி ஆத்திரங்கொண்டு "பலஸ்தீனத்தையாவது, வேறெந்த நாட்டையாவது பிரிவினை செய்ய இந்த ஸ்தாபனத்துக்கு உரிமையுண்டா என்று நான் சவால் விடுகிறேன்" என்ருர்.

பலஸ்தீனத்தைப் பிரிவினை செய்வதற்கு அமெரிக்காவும் ஆதரிக்கிறது.

## மானநஷ்டமாம்

### பாராளுமன்ற அங்கத்தவர்மீது

'திவாஸ" என்னும் சிங்களப் பத்திரிகையில் பிரதம மந்திரி மிஸ்ரர், சேனுநாயக்காவைப் பற்றியும் அவருடைய மகன், மிஸ்ரர். டட்லி சேனுநாயக்காவைப் பற்றியும் அவதூருன கட்டுரைகள் வரைந்தனர் என்று சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர். சோமவீர சந்திரசிறீ என்னும் பாராளுமன்ற அங்கத்தவர் கெதிராகக் கொழும்பு நீதிஸ் தலத்தில் ஓர் வழக்கு பொலிசாரால் தொடரப்பட்டிருக்கிறது

குறித்த சோமவீர சந்திரசிறீ இற்றைக்குச் சில காலத்துக்கு முன், இதுபோன்ற இன்னேர் வழக்கில் குற்றப்பட்டவராவர்.

1949-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1-ம் திகதிக்கு முன்னர், இன்னும் ஒன்றரை லட்சம் யூதர் பலஸ்தீனத்திற் சென்று குடியேற அநுமதிக்க வேண்டுமென்றும், அங்கே அமைதியை நிலைநாட்ட, சர்வதேசப் பொலிஸ்படை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கூறுகிறது.

## ஞானிகளும் சிரிப்பார்களா?

"சிவக்கவிமணி"

ஞானிகள் பல திறப்படுவர்; இவர்களை உலகில் அறிகின்ற விதமும் பல: மயிர் வளர்க்கின்றவர்கள்; நகம் வளர்க்கின்றவர்கள்; உடல் கழுவாதவர்கள்; பேசாதவர்கள்; பேசுகின்றவர்கள்; உடையில்லாதவர்கள்; கோவணம் உடையவர்கள்; என்றிவ்வாறு பலபல விதமாக உலகவர் ஞானிகளைப்பற்றி நினைத்துக் காண்கின்றனர். ஆனல் நாம் இங்குப் பேசும் ஞானிகள் இந்த வகைகளுள்ளும் அடங்கினவர்களல்லர். அடங்காதவர்களுமல்லர்; இவர்களை அறிந்துகொள்ளுதல் மிகக் கடினம்; செத்தாரைப்போலே திரி; 'செத்திட்டிருப்பர் சிவயோகியர்களே; எத்தொழிலில் நின்ருலும் சித்தம் சிவனிடத்தே நிலைத்துள்ளவர்கள்; ஞான மீசன்பா லன்பே;பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள்பாரார்; விழித்தகண் குருடாத்திரி வீரர்;மின்னுர் சடையார் தமக்காளாம் விதியால் வாழ்வார். கந்தை மிகையாங் கருத்துடையார்; "நாமார்க்குங் குடியல்லோம்......சங்கரற்கே மீளா ஆளாவோம்" "வானந் துளங்கில் என்?" "மன்னரோ டுறவு மஞ்சேன்" "கற்றுரை யான் வேண்டேன் கற்பனவுமினியமையும்" என்று பலவாறு கூறப்படும் தன்மைகளை ஒருவாறு அறியலாம.

மை கொண்டது. பெரிதும் சிறிதுமாகிய முதற்பொருள் பராசக்தி.

இதனைத் தியானத்திலே திறத்துகிறோம். இதனை நாவிலே புகழ்ச்சி புரிகின்றோம். செய்கையில் இதனைப் பின்பற்றுகின்றோம். நமது மதி தெய்வமதியாகின்றது. நமது நாவு புதிய வலிமையும் மகிமையும் பெறுகின்றது. நமது செய்வினை தர்மமாகின்றது ஒரே வார்த்தை. சக்தியை வேண்டினுல் சக்தி கிடைக்கும் "கேட்டது பெறுவாய்" என்ற யூத [illegible] மையை பெற்ற கிறிஸ்து [illegible] சொல்லுகிருர்.

சிரிப்பு என்பது உள்ள மகிழ்ச்சியின் வெளித் தோற்றம். சிலபோது கோபம் இகழ்ச்சி முதலியவற்றிலும் சிரிப்பு நிகழும். அவைவேறு. சிரிப்பு மனிதருக்கே உரியது. பிற உயிர்கள்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஹூ

புரட்டாதி ௩௧ உ வெள்ளிக்கிழமை

## நவராத்திரியிலே தேவியை வழுத்துக

"மாற்கரிய சேம்பதத்தோன் றேவியாகி
வல்வினையேன் எனதாவிக் காவியாகி
மேற்கருணைத் திருவுருவமுடையளாகி
வித்தகமா யைந்தொழிற்கும்வித்தாய் நின்ற
மேற்கருங்கட் டவளநகைக் களபக் கொங்கை
சிற்பரையிங் கெமையாளும் உமை யாள்செம்பொற்
காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங்கமலந் தீர்வாம்."

சகல அண்ட புவனங்களையும் அவற்றின்கண்ணே பொருந்திய சராசரங்களையும் பெற்றுப் பாது காத்தருளுந் தாயே! இப் புரட்டாசி மாசத்தில் நிகழ்கின்றதாகிய இந்த நவராத்திரிக் காலத்திலே உனது திருவருள் ஏனைய காலத்திற் பெருகுவதைக் காட்டிலும் அதிகமாகப் பெருகுமென்று பெரியார்கள் பாடியிருக்கிறார்களே; அல்லாமலும் இந்த ஒன்பது இரவுகளில் முதன் மூன்று இரவும் துர்க்கையாக நின்று வீரத்தையும், அடுத்த மூன்று இரவும் மகாலக்குமியாகி நின்று எல்லாவகைச்செல்வத்தையும், அடுத்த மூன்றிரவுகளிலும் நாமகளாக நின்று சகல கலைஞானத்தையும் அருளுபவள் நீதானுமே யம்மா! நிசந்தானு? நிசமென்றே நம்பக் கிடக்கின்றது. என்? அன்னையே உன் திருநாமங்களே நீ எல்லாம்வல்ல இறைவி யென்பதைக் காட்டிக் கொடுக்கின்றன. பராசக்தி, மகாசக்தி, மகேசுவரி, மனோன்மனி, புவனேசுவரி, அகிலாண்டநாயகி, உலகமாதா என்னும் இந்நாமங்களெல்லாம் உனக்கே யுரியன அம்மே! அன்னையே உன்னையின்றி அரனாக, அரியாக, அயனாக ஏதுஞ் செய்தல் முடியாதாமே! இந்த மகத்துவங்களை உத்தேசித்துத்தானே உன்னுடைய அடியவருள் ஒருவராகிய அபிராமிப்பட்டர் உன்னை

"நீயேதுணை யென்று நானிருந்தேன்
எனை நீ மறந்தால்
தாயே எனக்கொரு தஞ்ச முண்டோ?
சங்கு சக்கரத்தாய்
வேயீன்ற முத்துக்கும் விண்ணவர்
கோவுக்கும் வேதனுக்கும்
நாயேன்ற னக்கும் பதினு லுலகுக்கும்
நாயகியே"

என்று பாராட்டிப் போற்றியுள்ளார்.

சிறுமானேந்தும் பெருமான் பங்கில் வருமானே? உலகத்திலே யுள்ள பொருள்களுட் காணப்படும் அழகெல்லாம் தாயே,உன் அம்சமாமே; இயற்கையழகில் நீ வியாபகமாய் இருக்கிறாயாமே? நீ இல்லா விடத்து அழகு மில்லையாமே! நின்வசமாகா ஏழையாடவர்களைத் தம் வசமாக்கும்படி மகளிருக்கு வசீகரத்தைக் கொடுத்தவளும் நீதானுமே யம்மா உலக மாதாவே! உன்னுடைய திருவருள் வெள்ளம் பெருகும் இந்த நவராத்திரி வேளையில், உன்னை ஒரு வரம் வேண்டுகிறேன்; தருகிறாயா? அம்மா, முற்காலத்திலே காஞ்சீபுரத்திலே உனது நாயகராகிய ஏகாம்பரநாதரைக் குழைத்து அவரை வடுப்படுத்தி விட்டாயாமே! அதுமாத்திரமா, பருவதவர்த்தனித்தாயே! சரவணப் பொய்கையிலே ஆறு திருவடிவங்களைக்கொண்டு திருவிளையாடல் செய்த உன் இளைய குழந்தையாகிய முருகனை இரு கரங்களினாலுஞ் சேர்த்து ஆறு முகமும் பன்னிரண்டு கண்களும் அழகிய ஒரு திருமேனியுமாகக் குழைத்துக் கந்த னென்னும் நாமத்துடன் ஒரு வடிவமாக்கி விட்டாயாமே! சகல சராசரங்களையும் பெற்றும் நித்திய கன்னிகையாய் விளங்கும் அன்னையே, இப்படி யெல்லாஞ் செய்யும் நீ கற்பாறை போன்ற கடினமான என்னுள்ளத்தை, உன் மீது வைக்கும் பத்தியிலே, உன் கருணையிலே, சன்மார்க்கத்திலே செல்லும் வண்ணம் ஒருமுறை குழைத்து விட வொண்ணாதா?

அன்னையே, நின் மக்களுட் பலர் நின்னை மறந்தமையினால் பஞ்சம் பசி பிணி முதலாம் பல இன்னல்களையடைந்துவருந்துகிறார்கள். காலமழை யில்லாமை அகாலமழை முதலிய அநர்த்தங்களெல்லாம் இக்காலத்தில் இந்நாட்டிலே நேரலாயின; நீ உன் நாயகனோடு எழுந்தருளியிருக்கும் கோயில்கள் சில இங்கே நித்திய நைமித்திகங்கள் செவ்வனே நடைபெறுதலின்றிக் கிலமுற்றுக் கிடக்கின்றன; அந்தணர், அரசர், கற்புடை மகளி ரென்னும் மூப்பாலினருமே காலமழை பெய்தற்குப் பிரதான காரணரெனச் சொல்லப்பட்டுள்ளார்கள்; அந்தணராயுள்ளாரிற் பெரும்பாலினர் இக்காலத்தில் உன்னையாக, வேறு எந்த மூர்த்திகளையாக பூசிக்கும் விஷயத்தில் மிக அலட்சியமாக இருக்கிறார்களாமே; உன் திருமேனி குளிரும் வண்ணம் அபிடேகஞ் செய்வதற்கு அலுப்புப் படுகிறார்களாமே! பத்தி யில்லார் செய்யும் பூசையைப் பார்த்து உன் நாயகனார் எள்ளி நகைக்க நீயும் உடன் நகைப்பா யென்று சொல்லுகிறார்களே பெரியோர்; அந்தணரா யுள்ளார் உன்னைப் பத்தி பூர்வமாக வழிபடுவரேல் காலமழை பெய்யாது விடமுடியுமா? உலக மாதாவே, அந்தணர் விஷயம் அவ்வளவில்நிற்க, அரசராயுள்ளார் இந் நாட்டிற்கு அந்நியரானார்; கற்புடை மாதரும் மழைக்குக் காரணரல்லரோ வெனின், இக்கால மகளிரின் ஒழுக்கத்தைப்பற்றிச் சொல்லப் புகிற் பழிசேரும்; தாயே! உன்னை நினைந்து இங்கு உனைப் பூசியாத உலுத்தரெல்லாம், என்ன இருந்துகண்டார்!

ஆனாலும் அம்மையே, பொல்லாத சேயெனில் தாய்தள்ள நீதியோ, புகலிடம் பிறிதுமுண்டோ? உன் [illegible] பிழை செய்தா[illegible] வாகிய நீதானேயம்மா, பொறுத்தருளவேண்டும். கன்று துள்ளித் தாய்ப் பசுமேல் வீழ்வதன்றித் தாய்ப்பசு துள்ளிக் கன்றின்மேல் வீழ்ந்தால்என்னவாய் முடியும் அம்மா? சகல சராசரங்களுக்கும் தாயே, உன் மக்களாகிய நாமெல்லோரும் கன்மமேலீட்டினால் தாயை மறந்து நெறி தவறிப் பஞ்சம் பசி பிணி அடிமைத்தன மெல்லாவற்றிற்கும் ஆளானோம்! எங்கள் பிழை [illegible] ஆட்கொண்டு [illegible] நின்சடன் தாயே!

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—35)

### "பெற்றோருக்கு நான் ஓரேயொருபிள்ளை"

"அக்கா, என்பெற்றோர் யாழ்ப்பாணத்திலே வேளாண் குலத்தைச் சேர்ந்தவர்கள்; தூய சைவமுறைப்படி ஒழுகி வந்தவர்கள்; தகப்பனார் பெயர் சரவணமுத்தர்; தாயார் பெயர் தங்கம்மாள்; தகப்பனார் என் தாயாரைக் கல்யாணஞ் செய்தற்கு முந்தியே, இந்த மலாய் நாட்டிற்குவந்து இந்தவூரிலே புகைரதப் பகுதியில் உத்தியோகம் பார்த்து வருவாராயினர்; பின்னர் அவருடைய பெற்றோர் அவருக்கு விவாகஞ் செய்துவைக்க உத்தேசித்து ஊருக்கு வரும்படி தெரிவித்தபோது, அவர் ஆறுமாச விடுமுறைநாள் பெற்றுக்கொண்டு சொந்தவூருக்கு மீண்டு போய் அங்கே தமது தாய் மாமனுடைய மகளையே கல்யாணஞ் செய்து சிலநாள் தங்கிநின்ற என் தாயாரையும் உடன்கூட்டிக்கொண்டு இங்குவந்து பழையபடி தமது உத்தியோகக் கடமையைக் கிரமமாகப் பார்த்துவந்தாராம்: அந்தக் காலத்திலேதான் நான் பிறந்தேனென்றும் நான் பிறந்ததும் இந்தவூரிலேதானென்றும் என் அன்பான பெற்றோர்கள் சொன்னார்கள்;" [என்று சொல்வதற் கிடையில் தனபாக்கியத்தின் கண்களில் நீர்ததும்ப, தங்காய் கவலைப்படாதேயென்று பாக்கியலட்சுமி தேற்ற, ஒருவாறுதேறிப் பின்னுந் தன் வரலாற்றைச் சொல்லுகிறாள்] "எனக்குப்பின்னர் சகோதரர்களில்லை; நான் என் பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளையென்ற நியாயத்தினாலோ, வேறுகாரணம் பற்றியோ நானறியேன், என் பெற்றோர் என்னை அன்பாகப் பாராட்டிச் சீராட்டிப் பேணி வளர்த்து வந்தார்கள்; பருவமான பிராயத்தில் எனக்கு ஏடு தொடக்கி, ஒரு தமிழ் உபாத்தியாயர் தினமும் வீட்டிற்கு வந்து என்னைப் படிப்பித்தற்காகிய ஒழுங்குகளை என் அருமையான அப்பர் செய்து வைத்தார், இரண்டுவருட காலம் அந்த உபாத்தியாயரிடத்திலே நான் தமிழை மாத்திரம் படித்துக்கொண்டு வரும்போது என் தகப்பனார் என்னைச் சமீபத்திலுள்ள ஒரு வித்தியாசாலையிலே தமிழும் ஆங்கிலமும் படிக்கும்படி கொண்டுபோய்ச் சேர்த்தார்; நான் வீட்டிற்றனேயிருந்து தினமும் பள்ளிக்கூடத்திற்குப் போய்வரலானேன். அந்தப் பள்ளிக்கூடத்திற் படித்து ஆங்கிலம் ஐந்தாம் வகுப்பிலும் தமிழ் ஏழாம்வகுப்பிலும் சித்தியடைந்தேன்: அதன்மேல் அங்கே படித்தல் இயலாதாக, ஒருநாள் என் தகப்பனார் தாயாரைப் பார்த்து "நீயும் ஊரைவிட்டு இங்கே வந்து பலவருடங்களாயின; எங்கள் மகளை ஊரிலேயுள்ள இனசனத்தார் பார்க்க ஆசைப்படுவதாகக் கடிதங்கள் எழுதியுள்ளார்கள்: நான் இப்போதைக்கு விடுமுறை பெற்றுக்கொண்டு உங்களுடன் ஊருக்கு வருதல் முடியாமலிருக்கிறது; என்னுடன் உத்தியோகம் பார்த்த இன்னொருவர் ஊருக்குப் போய்விட்டபடியால் அவர் வருமளவும் நானே அவருடைய கடமையையுஞ் சேர்த்துச் செய்யவேண்டியிருக்கிறது: அல்லாமலும் எங்கள் மகள் மேற்படிப்பு இங்கே படிக்க முடியாதவளாயிருக்கிறாள்; ஆண்பிள்ளைப் பேறு இல்லாத நாங்கள் இந்தப் பெண்பிள்ளையையேனும் ஆண்பிள்ளையைப் படிப்பிப்பதுபோலப் படிப்பித்து விட்டால் அதனால் எங்களுக்கும் நன்மையுண்டு; எங்கள் பிள்ளைக்கும் நன்மை பின்னுக்குண்டு; ஆதலினாலே நீயும் எங்கள்குழந்தையுமாக இப்பொழுதுபுறப்பட்டு ஊருக்குப்போகலாம்; போய் அங்கே எங்கள் பிள்ளையை இராமநாதன் கல்லூரியிலே விடுதியிற் சேரச் செய்து தமிழும் இங்கிலீசும் படிக்க வைக்கலாம்; இன்னும் ஒரு வாரத்தில் என்னுடைய நண்பரொருவர் தம் குடும்பத்தோடு இங்கிருந்து எங்கள் சொந்தவூருக்குப் புறப்பட உத்தேசித்திருக்கிறார்; அவர்கள் துணையில் உங்களையும் அனுப்பி வைக்கலாமென யோசிக்கிறேன்" என்றார்.

### "மங்கைப் பருவ மடைந்தேன்"

இப்படித் தகப்பனார் சொன்னபோது என்தாயார் பெருங் கவலை கொண்டார்; முற்காலத்திலே, நளமகாராசன் புட்கரனோடு சூதாடித் தங்கள் நாடு நகர் செல்வம் அதிகாரம் எல்லாவற்றையு மிழந்து, தன் தாரம், மக்களென்னு மிவர்களுடன் காட்டு மார்க்கமாக நடந்து போகும்போது, தன் மனைவி மக்கள் வனவாசத்திற் சங்கடப்படுவார்களென்றெண்ணி, கற்பிற் சிறந்த தன்னுடைய தேவியைப் பார்த்து, "பெண்ணே, இந்தக் காட்டில் என்னுடன் வந்து கஷ்டப்பட உன்னால் முடியாது, எங்கள் அரிய மக்களுடன் உன் தந்தையாருடைய மாளிகைக்குப் போய்ச் சேர்" என்று சொன்னபோது, அந்த உத்தமியாகிய தமயந்தி அவ்வார்த்தையைக் கேட்டு எவ்வளவு கவலைப்பட்டாளோ, அவ்வளவு கவலைப்பட்டார். அப்பர் சொன்ன வார்த்தையைக் கேட்டு என் தாயார்; அக்கா, என் தாயார் ஊருக்குப் போதற்குச் சம்மதப்படாமைக்குக் காரணஞ் சில உண்டு; என் தகப்பனாரெனிலோ, சைவாசாரமுள்ளவர்; மற்ச மாமிசம் மதுபானமென்னும் இத் தீமைகளைச் சந்ததி சந்ததியாக வெறுத்த பாரம்பரையிற் பிறந்தவர். விரத அநுஷ்டான முடையவர் என்று உங்களுக்கு முந்தியே சொன்னேன், அக்கா, இப்படிப்பட்டவர் ஒரு சுயம்பாகியை வைத்துச் சமையல் செய்வித்தேனும் விடுதிகளில் உணவு செய்தேனுங் காலங் கழிக்கக் கஷ்டப்படுவாரென்றெண்ணியே என் தாயார் என்னுடன் ஊருக்குப் போக விரும் விரும்பினாரல்லர்; தாயாருடைய உள்ளக் குறிப்பை யுணர்ந்த என் தந்தையார், தாயாரைத் தம்முடன் தானே இருக்கச் செய்து, என் படிப்பைப் பற்றிச் சிலநாள் யோசித்து, எங்கள் வீட்டி லிருந்து நாலு ஐந்துமைல் தூரத்தி லுள்ள ஒரு உயர்தர வித்தியாசாலையிற் சேர்ந்து நான் படித்தற்கும், அந்த வித்தியாசாலையிலே தங்கியிருந்து படித்தற்கான விடுதிச்சாலை யில்லாமையினால், அதற்குச் சமீபத்திலுள்ள யாழ்ப்பாணத்து நண்பருடைய வீட்டிலே தங்கியிருந்து பள்ளிக்கூடத்திற்குப் போய் வருதற்கும் ஆன ஒழுங்குகளைச் செய்து என்னை அப்படியே அங்கே யிட்டுக்கொண்டு போய் அப்பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படிக்கவும், அந்த நண்பர் வீட்டிலே தங்கி யிருக்கவும் ஆக வேண்டிய ஒழுங்குகளை யெல்லாஞ்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்தர் நினைவு

## கோலாலம்பூரில் கூட்டம்

( நமது நிருபர் )

சுவாமி விபுலானந்தர் முத்தமிழ் வல்லுநர். அவர் தமிழுக்காகவும் தமிழருக்காகவும் ஆற்றியுள்ள தொண்டு அனந்தம். நீண்டகாலம் தமிழுலகிற்கு அரிய தொண்டாற்றமுன் ஆண்டவன்பாதமலரை அவர் அடையுமாறு நேர்ந்தது தமிழர்களுக்கு நஷ்டம். அந்த நஷ்டத்தை கோலாலம்பூர் தமிழ் வாசிகள் உணர்ந்தனர். அவர் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை புரிந்தனர். அவ்வனுஷ்டானம் அமைதியுடன் சென்ற செப்டம்பர்மீ 2-ந் தேதி நிறைவேறியது. அதன் விபரம் வருமாறு:

சுவாமி விபுலானந்தர் நினைவு நாளை கோலாலம்பூர் விவேகானந்த ஆச்ரமத்தில் கொண்டாட உத்தேசித்து, அதற்கென ஒரு சபை அமைக்கப்பெற்றது. அச்சபையினர் தக்கதோர் திட்டம் தயாரித்தனர்.

20 9.47 இரவு 9-30 மணிக்கு சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி கோலாலம்பூர் வானொலி நிலையத்தி லிருந்து ஸ்ரீ இ. ச. அப்புத்துரை ஓர் சொற்பொழிவாற்றினர். பின்னர் கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்தி சபா மாணவிகளால் அடிகளார் பேரில் இயற்றப்பெற்ற பாடல்கள் இனிமையாகப் பாடப்பெற்றன.

### பொதுக்கூட்டம்

21-9-47 ஞாயிறு மாலை 4 30 மணி தொடக்கம் கோலாலம்பூர் விவேகானந்தா ஆசிரமத்தில் நினைவுநாள் வைபவம் நடைபெற்றது. மண்டபத்தில் சுவாமிகள் திருவுருவப்படம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது சுமார் 500 பிரமுகர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூர் ஸ்ரீமத் ராமகிருஷ்ண மடாலயத் தலைவர் ஸ்ரீ வாமதேவானந்தா, அடிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். கோலாலம்பூர் திரு. செல்வரத்தினம் அவர்களால் சுவாமிகளது படம் வரையப்பட்டிருந்தது. சபையினர் எழுந்துநின்று சுவாமிகளின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தனை புரிந்தனர். சுவாமி வாமதேவானந்தா, சுவாமிகளின் அருட் பணியையும், அவருடன் தாம் கொண்டிருந்த நட்பையும் விளக்கி ஆங்கிலத்தில் சொற்பெருக்காற்றினர் திரு வேதய்யாக் குருக்கள் தேவார பாராயணம்செய்தார். பிறகு சங்கீத அபிவிருத்தி சபா மாணவிகள் அடிகள்பேரில் இயற்றப்பெற்ற மதுரமான கீதங்களைப் பாடினர்.

கூட்டத்திற்கு திரு. சி. சின்னத்துரை எம். டி. இ தலைமை வகித்தார். அறிஞர்கள் பலர் அடிகளின் தொண்டுகளைப்பற்றி விரிவுரையாற்றினர்.

தமிழ்நேசன் பத்திராதிபர் ஸ்ரீ ஆதிநாகப்பன் சுவாமிஜிக்கு தமிழர்கள் செலுத்த வேண்டிய காணிக்கையைச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

சிங்கப்பூர் சுவாமி சத்தியானந்த பாரதி அடிகளுடன் தாம் கடைசியாக நடத்திய சம்பாஷணைகளை உருக்கமாக விரித்தார். சுவாமிஜீயின் சமயசேவையை விளக்கினர்.

மலாக்கா 'தமிழ்க்கொடி' பத்திராதிபர் ஸ்ரீ உ. அரு. அருணாசலம் செட்டியார், தக்க மேற்கோள்களுடன் கவர்ச்சிகரமாக சுவாமிஜியின் கைங்கர்யங்களை எடுத்துரைத்தார்.

பௌத்த குரு தர்மதவீ சுவாமிஜிகாட்டியுள்ள வழியில் மக்கள் செல்லவேண்டிய கடமையைச் சுருக்கமாகஎழுதிக்கொண்டு வந்திருந்தார். அது தமிழில் வாசிக்கப் பெற்றது.

ரெவரெண்ட் கதிர்காமர் பேசியபோது தமிழ்மக்கள் தங்கள் நாட்டு மகான்களை சாதி சமய வேறுபாடின்றி ஆதரித்து சுவாமிஜியின் போதனைகளைப் பின்பற்றி ஒற்றுமையாக வாழவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திரு. வேதையாக் குருக்கள் புராண மேற்கோளுடன் சுவாமிஜியின் சிறப்பை எடுத்துரைத்தார்.

பின்னர் திரு. ம. கந்தையர சுவாமிஜியின் பேரில் அரிய பாக்கள் பாடினர்.

முடிவுரை கூறுகையில் தலைவர், சுவாமிஜியின் ஞான போதனையை மக்கள் ஏற்று நல்வாழ்க்கை பெறவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக சபையின் கௌரவ காரியதரிசி திரு. நா. பொன்னையா அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டது சுவாமிஜி ஞாபகார்த்தமாகத் தயாரிக்கப்பட்டிருந்த 'நினைவுமலர்' வினியோகிக்கப்பெற்றது.

### ஞாபகதினமும் பெற்றோர் தினமும்

காரைச் சிற்றம்பல முதலியார் ஞாபகதினமும், மாணிக்கவாசக, சரசுவதி வித்தியாலயங்களின் பெற்றோர் தினமும், 21.9.47 பிற்பகல் 4 மணிக்கு காரைச் சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில், பருத்தித்துறை நீதிபதி திரு P. A. de S. சேனரத்ன அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பருத்தித்துறை வட்டார வித்தியாதரிசினி Miss. M E ?. இரசோல்ட் அவர்களும், பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராய திரு தா. இராமலிங்கம் அவர்களும் சமூகமளித்தனர். தலைவர் முதலாயினோர்க்கு மாலையிட்டுபசரித்ததும், கூட்டம் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. வந்தனப்பா படித்தபின், பாடசாலைகளின் அறிக்கை தலைமையாசிரியை ஸ்ரீமதி சி. பொன்னுச்சியவர்களாற் படிக்கப்பட்டது. தலைவர் முன்னுரை நிகழ்ந்ததும் முதலியார் திரு. சி. சின்னத்தம்பி அவர்களாலும், நியாயதுரந்தரர் திரு. க. ஜெயக்கொடி அவர்களாலும், காலஞ்சென்ற முதலியாரின் வாழ்க்கை, தொண்டுபற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. தலைவரின் பாரியாரவர்களால் மாணவ மாணவிகட்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. சில மாணவ, மாணவிகளால் பேச்சு, சம்பாஷணை, கும்மி, நடிப்பு, பாட்டு முதலிய நிகழ்ச்சிகள் சபையோர் மகிழுமாறு செவ்வனே நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரை நிகழ்ந்ததும், திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள் நன்றியுரை பகர மாலை 8 மணியளவில் நிறைவெய்தியது.

கடித,

## பாகிஸ்தான் பிரதிநிதி

### மிஸ்ரர் ரூஸிக்கிற்குப் பதவி?

இந்தியாவில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் எம். டபிள்யூ. எச். டீ. சில்வா சென்ற ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு மீண்டிருக்கிறார். அவர் சில தினங்கள் ஓய்வு பெறுதற்கே இங்கே வந்துள்ளாராம்.

இலங்கை இந்தியப் பிரச்சினை விஷயமாக மிஸ்ரர் சில்வா, பிரதமர் மிஸ்ரர் சேனநாயக்காவுடனும், சேர்ஒலிவர்குணதிலகாவுடனும் சம்பாஷிப்பார் என்றும், இந்தச் சம்பாஷணையில்போது பாகிஸ்தானிலே இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதியாக யாரையும் நியமிக்கவேண்டுமோ என்பதும் திட்டவட்டமாக நிச்சயிக்கப்படுமாம்.

பாகிஸ்தானில் இலங்கைப் பிரதிநிதியை நியமிக்கவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டால், மிஸ்ரர் ஏ. ஆர். ஏ. ரூசிக் இந்த ஸ்தானத்துக்கு நியமிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களிற் பேசிக்கொள்ளப்படுகிறது.

மிஸ்ரர் ரூசிக் மூந்திய அரசாங்கசபையில் அங்கத்தவராயிருந்தவர். மட்டக்களப்புத் தொகுதியொன்றில் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐ. தே. கட்சி அபேட்சகராக நின்று தோல்வியுற்றவர் என்பதும் ஈண்டுக்குறிப்பிடத்தக்கதாகும்.

## மைசூரிற் சமரசம்

### பொறுப்பாட்சி வழங்க முடிவு

தென் னிந்தியாவிலே, இரண்டாவது பெரிய சமஸ்தானமாகிய மைசூர், சமஸ்தானம் காங்கிரசின் கோரிக்கைகட்கிணங்கி அங்கே பொறுப்பாட்சி வழங்கத் தீர்மானித் திருக்கிறது. இவ் விஷயமாக, சமஸ்தானத்துக்கும், காங்கிரசிற்கு மிடையே பிணக்குண்டாயதும், அதன் பயனாகக் காங்கிரஸ அங்கே சட்டமறுப்பு ஆரம்பித்ததும் யாவரும் அறிந்தனவாகும்.

இப்போது காங்கிரசிற்கும் சமஸ்தானத்துக்கு மிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைப்படி சமஸதான அரசாங்கம் 9 மந்திரிகளால் நிருவகிக்கப்படும் இந்த ஒன்பதின்மரில் அறுவர் காங்கிரஸ பிரதிநிதிகளா யிருப்பர். பிரதம மந்திரியாக வருபவரும் காங்கிரசின் பிரதிநிதியாயே யிருப்பர்.

# அரசாங்கத்தின் முதல் வெற்றி

## பாராளுமன்றத் தலைவர் தெரிவு

யாவரும் எதிர்பார்த்த பாராளு மன்றத் தலைவர் தெரிவு சென்ற செவ்வாய்க்கிழமை முடிந்துவிட்டது. மிஸ்ரர். சேனநாயக்காவின் அரசாங்கத்துக்குப் போதிய பலம் உண்டா? அல்லது எதிர்க்கட்சி அதனைக் கவிழ்த்து விடுமா என்னும் பிரச்னை இத் தலைவர் தெரிவிலே முடிவாகிவிடும் என்று பகிரங்கமாகக் கூறப்பட்டது.

இருவர் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டனர். ஒருவர் மிஸ்ரர். சேனநாயக்காவின் ஐ தே. கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர் ஏ. எப் மொலமூரே; மற்றவர் எதிர்க்கட்சியினரால் நியமிக்கப்பட்ட மிஸ்ரர். எச். ஸ்ரீநிசங்க என்னும் நியாயவாதியாவர்.

ஈற்றில் மிஸ்ரர். மொலமூரேதான் 17 பேரின் அதிகப்படியான வாக்குச் சம்மதங்களினுல் தெரிவு செய்யப்பட்டார். மிஸ்ரர். மொலமூரேக்குச் சாதகமாக 58 பேரும், மிஸ்ரர். ஸ்ரீநிசங்காவுக்குச் சாதகமாக 41 பேரும் சம்மதம் அளித்தனர்.

உபதலைவர் தெரிவில், ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மிஸ்ரர். ஆர். ஏ. டீ. மெல் எதிர்க்கட்சியைச்சேர்ந்த மிஸ்ரர். வில்மட் பெரீரா என்பவரை 5 வாக்குச் சம்மதங்களினுல் வெற்றி கொண்டார்.

நிருவாக சபைகளின் உபதலைவராக மிஸ்ரர். ஜே. ஏ. மாட்டின்ஸ் என்பவர், (நியமனப் பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டார்.

மிஸ்ரர் மொலமூரேயின் பெயரைத் தலைவராகப் பிரேரித்தவர் ஸ்ரீ க. சிற்றம்பலம் (தபால் தந்திப் பகுதி மந்திரி) அநுவதித்தவர் பட்டிருப்புப் பிரதிநிதி எஸ். யூ எதிர்மனசிங்கம்.

மிஸ்ரர் ஸ்ரீநிசங்காவின் பெயரைப் பிரேரித்தவர் மிஸ்ரர் வில்மட் பெரீரா: அநுவதித்தவர் ஸ்ரீ அல்பிரட் தம்பிஐயா.

தலைவர் தேர்தல் முடிந்தபின், மிஸ்ரர், மொலமூரே, ஸ்ரீமான்கள் சிற்றம்பலம், எதிர்மனசிங்கம் சகிதமாகத் தேசாதிபதியிடம் சென்று இராஜ விசுவாசப்பிரமாணம் செய்தார். அதன் பின் பாராளுமன்றத்துக்கு வந்து தன்கடமையை ஏற்றார். தாம் ஐக்கிய தேசீயக் கட்சியைச் சேர்ந் திருந்தபோதிலும், பாராளுமன்றத்துக்குச் சபாநாயகராக வந்ததிலிருந்து கட்சிபேதமின்றி நடுநிலைமையோடு எவர்க்கும் பொதுவாக நடப்பதாக மிஸ்ரர். மொலமூரே உறுதி கூறினர்.

சர்வகட்சித் தலைவர்களும் மிஸ்ரர். மொலமூரேயைப் பாராட்டினர்.

டொனமூர் அரசியல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோதும் மிஸ்ரர். மொலமூரே அரசாங்கசபையின் முதல்தலைவரானர். சோல்பெரித் திட்டத்தின் போதும் அவரே முதல் தலைவராயினர் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

# சினிமாவிற் பெண்கள்

## இலங்கை நடிகையின் விளக்கம்

சென்றமாசம் வங்கநாட்டுத் தலைவர்களுளொருவராகிய ஸ்ரீஜுத் சரஸ் சந்திரபோஸ் சென்னையில் வந்து தங்கிய காலத்து, இலங்கை நடிகையாகிய குமாரி கே. தவமணிதேவி அவரைச் சந்தித்து படக்காட்சிகளின் பொருட்டு நடிக்கும் நடிகைகளின் ஒழுக்கத்தைப் பாதிக்கும் விஷயமாகப் பேசினர்; "தங்களுடையஅரிய சகோதரர் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் சீவந்தராயிருக்கிறாரென்ற செய்தியைப் பற்றித் தங்கள் அபிப்பிராயமென்னவோ" என்று குமாரி தவமணி வினவியபோது "என் சகோதரர் இன்னமுஞ் சீவந்தராய் இருக்கிறார் என்று மற்றையோர் பலர் நம்புவது போலவே நானும் நம்புகிறேன்; ஆனல் அது நம்பிக்கையே யொழிய அதற்குமேல் ஏதும் அறியமுடியவில்லை" என்றாராம் ஸ்ரீஜுத் சரஸ்போஸ் தென்னிந்தியாவில் ஆக்கப்பட்டுவரும் படக்காட்சிகளைப் பற்றிப் பேசியபோது 'படமாக்கும் அரிய செயல் இக்காலத்தில் அந்த விருத்தியிலே திறமையற்றவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருப்பதனுல், இங்குள்ள படங்களின் மகத்துவமும் நுட்பமும் குறைந்து வருகின்றன" என்றுகூறிப் பின்னரும் குமாரி தவமணிதேவி படத்திற் சென்று நடிக்கும் யுவதிகள் தங்கள் மானத்தைக் காப்பதற்குக் கஷ்டப்படுகிறார்களெனவும், சில சந்தர்ப்பங்களில் அவர்களுடைய மானத்தைக் காத்தற்குத்தாமே வாதாடவேண்டி நேர்ந்ததெனவும், இவ்விஷயத்தில் படம் ஆக்குவோர், நிர்வகிப்போர் முதலாம் அதிகாரிகள் யுவதிகளோடு நடந்துகொள்ளும் முறை வெறுப்பானதெனவும், அவர்கள் செய்யும் அக்கிரமத்தைப் படங்களிற் சேர்ந்து நடிக்கும் சில கன்னியர் தமக்கு வந்து முறையிட்டபோது தாம் அவர்கள் மானத்திற்குப் பங்கம் வராமற் காத்ததுண்டெனவும். அப்படியான பாதுகாப்புச் செயலில் தாம் ஈடுபட்டமையினுற் படமுதலாளிகள் முதலான சில அதிகாரிகளுக்குத் [illegible] இப்படியான காரணங்களினுற்றான் தமக்குப் படங்களிற் சேர்ந்து நடிப்பதற்கு அதிக சந்தர்ப்பம் ஏற்படுவதில்லையெனவும் தெரிவித்தனர்.



இவைகளைக்கேட்ட திரு. சரத் சந்திரபோஸ் தென்னிந்திய படங்கள் விஷயத்திலே சில அக்கிரமங்கள் நடைபெறுவதாகத் தம்காதிற் பட்டதெனவும், படங்கள் சிறந்த தேசீய முறையில் நடத்தப்படல் வேண்டுமெனவும், படத்திலே சேர்ந்து நடிக்கும் பெண்களின் ஒழுக்கத்திற்குப் பங்கம் நேரவொட்டாது தடுத்தற்பொருட்டு, இரகசியப் பொலிசாரை ஒழுங்கு செய்தல் வேண்டுமெனவும், தாம் அதற்காகிய ஒழுங்குகளைச் செய்ய உத்தேசித்திருப்பதாகவும் கூறினராம். தம்மைக் கண்டு பேசுதற்குச் சந்தர்ப்ப மளித்ததையிட்டு குமாரி தவமணிதேவி திரு. சரத் போஸிற்கு நன்றிகூறி, தம் விஷயமாகப் பெரியோர் கொடுத்த அபிப்பிராயப்புத்தகத்தைக் காட்டி, போஸ் அவர்களின் அபிப்பிராயத்தையும் பெறக்கேட்ட போது, மகாத்மா காந்தியின் அபிப்பிராயமும் அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு வியந்து, "மகாத்மாவின் அபிப்பிராயம் இங்குக் குறிக்கப்பட்டிருக்கும்போது எம்முடைய அபிப்பிராயம் தேவையில்லையே, ஆனலும் தருகிறேன்" என்று தமது அபிப்பிராயத்தையும் அப்பிரதியிற் குறித்துவிடைகொடுத்தனுப்பினர்.

### முகமாலை ஸ்ரீ ஆநந்தாஸ்ரமம்

ஷை ஆஸ்ரமத்தில் அன்னை கிருஷ்ணாபாயின் ஜெயந்தி விழா சென்ற 13-10.47 திங்கட்கிழமை மாலை 7 மணி தொடக்கமாக மிகவும் சிறப்பாக நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிகளும் சிரிப்பார்களா ?

முதலாம் பக்கத் தொடர்ச்சி

எவையும் சிரிப்பதில்லை. அவற்றின் உள் மகிழ்ச்சியை வேறு வகையால் அறிதல்வேண்டும். "பசுக்களெல்லாம் நாத்தழும்ப நக்கி மோந்தணைந்து கனைப்பொடு நயந்து, வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத்துள்ளியபின்" (திருமூலர் புரா.14) "ஆனினங்களணைந்த மகிழ்ச்சி யளவின்றி.... அருகுசாந் தருகித் தாயாந் தன்மை நிலையினவாய்க் கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவாமே பால்பொழிந்தனவால்" (சண்டேசர் புரா 30) முதலியவை பார்க்க. மனிதர்களைச் "சிரிக்கின்ற பிராணி" என்று வரையறுப்பாருமுண்டு. "மனிதன் சமைத்து உண்கின்ற பிராணி" "ஆயுதங்கள் செய்து உபயோகிக்கின்ற பிராணி" "நிமிர்ந்து நிற்கின்ற பிராணி" என்று பலப்பல விதமாய் வரையறை கூறுவார்கள்; அவற்றுள் "மனிதன் சிரிக்கின்ற பிராணி" என்பது ஒன்று. ஆனால் இவையெல்லாம் சிரிப்புக்கே யிடமாய் மனிதத்தன்மையைக் குறைத்துக் கூறுதலேயாம் உண்மையான வரையறையாவது "மனிதன் நினைக்கின்ற பிராணி" என்பதேயாம். "நினைக்கவேண்டுவது இது; நினைக்கக்கூடாதது இது என்றறிந்து நினைப்பவன் மனிதன்: இவ்வாறு நினைக்கும் மனிதரிற் றலையான மனிதர்கள் தான் ஞானிகள் எனப்படுவோர்.

ஞானிகளும் சிரிப்பார்களா? என்று தலைப்பில் கேட்டோம்; அந்தக் கேள்விக்கு விடை சொல்லுதல் எளிதான காரியமன்று; "ஞானிகள் சிரிக்கமாட்டார்கள். சிரிப்பு என்பது கேலிக்கூத்து. கொக்கரிப்பு, வேடிக்கை, விகடம் முதலிய தாழ்ந்த மன நிலைகளுக்கே இடமாகும்." "உயர்ந்த ஆழ்ந்த சூழ்ந்த மனநிலை (serious and serene and deep concentration) உடையாரிடம் சிரிப்புக்கு இடமில்லை" என்று பலபேர் நினைக்கிறார்கள்; பரமண்டலத்தில் வேடிக்கை, விளையாட்டு, குதூகலம், சிரிப்பு முதலியவற்றுக்கு இடமில்லை என்று வேதகுருக்கள்மார்கள் கூறுவார்களாம். பூனைகளும் வால் குழைத்து விளையாடாமலிருக்கும்படி அவற்றின் வால்களை வெட்டிவிடுவார்கள் என்றொரு அமெரிக்க ஆசிரியர் வேடிக்கையாய் எழுதினர். ஞானிகள் எப்பொழுதும் அழுதுகொண்டேயிருப்பார்கள், அழுமூஞ்சிகள் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் "மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும்" என்று நமது பெரியோரைப்பற்றிச் சொல்லியிருக்கிறதே என்றால் அது வேறு. இவர்கள் கண்ணீர் வேறு; மற்ற உலகருள் மகன் செத்தான், பெண்டாட்டி இறந்தாள்; தந்தையார் போயினர், தாயரும் போயினர் என்றபோதெல்லாம் மக்கள் விடுக்கும் கண்ணீர் வேறு. முன்னையது சிவனைப்பற்றிய ஆனந்தமாகிய சுத்தமுடைய கண்ணீர்; "அன்பர்வார்ந்த கண்ணருவி மஞ்சனசாலை" (திருவிசைப்பா) என்றபடி அது இறைவர் விரும்பி ஆடும் தீர்த்தமாகும். ஆனால் பின்னையது (நமது உலகத்துத் துன்பக் கண்ணீர்) மலசலம்போல அசுத்தக் கண்ணீர். இவையிரண்டையும் கண்ணீர் என்ற ஒரு தன்மைபற்றியே ஒன்று எனக் கருதுவது அறியாமையேயாகும். கோயில்கள் மடங்கள் இவைகளிலும் பணம் இருக்கிறது. உலகத்தார் துராசையாய் மக்கள் கொள்ளைகொண்டு சேர்க்கும் இடத்திலும் பணம் இருக்கிறது. இந்த ரூபாய்க்கும் 16 அணாதான் விலை அந்த ரூபாய்க்கும் 16 அணாதான் விலை என்று இரண்டும் ஒன்று என்று எடுத்து கோயில் மடங்களின் பணத்தையெடுத்து உலகச் செயல்களுக்குச் செலவிடலாம் என்று கூறுவோர்களது மடமை எப்படியோ அப்படியேதானிதுவும்,

சிரிப்பினும் பேதமுண்டோ? எனின் உண்டு, ஞானிகளின் சிரிப்பு வேறு. அது இறைவனையே பற்றி நிற்கும்; உலகத்தைப் பற்றியிராது. அது உயிரைச் சுத்தமாக்கிப் பிறவியை அறுக்கும். மக்களின் உலகச்சிரிப்பு வேறு அது சடசம்பந்தமானது. அசுத்தமானது மேலும் பிறவிக்கு வித்தாகும்.

ஞானிகளும் சிரிப்பார்கள்: "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்" என்பது திருவாசகம். அவர்கள் இறைவனோடுதான் கூடி விளையாடிச் சிரிப்பார்கள். அந்த நிலை நம்மனோர்க்கு விளங்குதல் கடினம். சிறிது மாறு கண்ணுடைய சிறு பிள்ளைகளுள் ஒருவன் மற்றவனைப் பார்த்து "அடே! அவன் ஒன்றரைக்கண்ணன்டீரியோ" என்று விளையாடுவதுண்டு. அது போல அப்பர் சுவாமிகள் இறைவரை நோக்கி இறைவரே முழுக்கண்ணுடைமையும் கண்ணில்லாமை என்பதல்லவா? அரைக்கண்ணுடையாரை நான் எங்குங்கண்டதில்லை; நீர் உமது உடம்பில் அரைவாசி உமையம்மைக்குப் பாகம் பிரித்துக் கொடுத்துவிட்டீர்; ஆதலின் உமக்குள்ள மூன்று கண்களுள் உமக்குப் பாதிதான் பாத்தியம்; நீர் ஒன்றரைக் கண்ணரே" என்று சுவாமியுடன் வேடிக்கை பேசிச் சிரிக்கின்றார்.

"இன்றரெக் கண்ணுடையா
ரெங்குமில்லை யிமயமெனும்
குன்றரைக் கண்ணன்
குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அருறரைக் கண்ணுங்
கொடுத்துமை யாளையும்பாகம்
ஒன்றரைக் கண்ணன் [வைத்த
கண்டீரோற்றி யூருறையுத்தமனே"

மாணிக்கவாசக சுவாமிகள் இறைவருடன் விளையாடிச் சிரிக்கின்றார் "இறைவரே உம்மை ஒருகுணமுமில்லாதவர்; மானிடனேயன்றிக் கடவுட்டன்மையற்றவர்; தேய்ந்த மதியை உடையவர் என்று பழி கூறுவேன்; அந்தப் பித்தன், இந்தப் பித்தன் என்று உமது பைத்தியக்காரத் தன்மைபற்றி ஏசுவேன்" என்கிறார்.

"....வேலைநஞ்சுண், மழைதரு கண்டன், குணமிலி மானிடன், தேய்மதியன், பழை தருமாபரனென் றறைவன் பழிப்பினையே" (நீத். 46) "........வெங்கரியின், உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்சனூர்ச் சுடுகாட், டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப் பிச்ச னென் பேசுவனே" (நீத் 49)

இனிச் சுந்தரமூர்த்தி நாயனுர் இறைவருக்குத் தோழர் என்றமுறையில் அவருடன் வேடிக்கையாகப் பல விடத்தும் கேளிக்கை செய்து சிரிக்கிருர். வேதாரணியம் - கோடிக்கரை. அங்கு கோடிக்குழகர் கோயில்; தனியாய்க் கடற்கரையில் இருக்கிறது: கடற்காற்றுக் கடிதாய் மணலையள்ளி வீசி அடிக்கிறது. பக்கத்தில் குடியொருவருமில்லை இதை ஆளுடைய நம்பிகள் பார்க்கிருர். ஏ! சுவாமி, நீர் ஏன் உமது சொந்த ஊர்களை விட்டு இந்தக் கடற்கரையில் வந்து தனியாய் இருக்கிறீர்; உமக்கு உம்மூரைப்பற்றி மானக்கேடான வார்த்தை ஏதோ வந்துவிட்டதுபோலும். உமக்குப் பிரியமான ஊர்கள் இரண்டு. ஒன்று ஒற்றியூர்; மற்றொன்று ஆரூர். இரண்டிலும் நீர் அரசராகி அரசாங்கம் செலுத்துகிறீர். உப்படியிருந்து அங்கு வருபவர்கள் ஒற்றியூரேல் உம்மதன்று நீர் கடன்பட்டு ஒற்றிவைத்த ஊர் என்கிருர்கள்; மற்றதனை உம்முடைய சொந்தமான தொன்மையான இராசதானியாகிய தலைநகரம் என்று கண்டும், இது ஆருடைய ஊர் என்று ஆரூர் ஆரூர் என்று உம்மெதிரிலேயே கேட்கிருர்கள். இந்த அவமானம் பொறுக்கலாற்றாது இங்குவந்து கடற்கரையில் மணிதர் [illegible] கடலை நோக்கி [illegible] உமக்கு மதி (புத்தி) முற்றவில்லை

என்று வேடிக்கை பேசிச் சிரிக்கிருர். இஃது அவர் பாட்டு:

ஒற்றியூ ரென்ற வூனத்தினா லதுதானோ?
அற்றப் படவா ரூரதென் றகன்றயோ
முற்ற மதிசூடிய கோடிக் குழகா
[illegible] மெம் பிரானே
ஆகவே, ஞானிகளும் சிரிக்கின்றார்களல்லவா?

—சித்தாந்தம்


# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

தந்தரோக சஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சும்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக
# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்
எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ
லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ;
252, காங்கேசன்துறைறேட்,
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47&28.2 48


## நூற்குறிப்பு

### முத்திநிச்சயமூலமும் வெள்ளியம்பலவாண மாபாடியமும்

தென்னிந்தியாவிலுள்ள பழைய சைவாதீனங்களுள் திருப்பனந்தாளும் தருமபுரமும், முன்னுளிற்போல், இந்நாளிலும் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வருகின்றன. இவற்றுள், தருமபுரம் நூல் வெளியீட்டையே முக்கிய தொண்டாகக் கைக்கொண்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இவ்வாதீனத்தாற் பிரசுரம் செய்யப்பட்டுப் பெரும்பாலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் வெளியிடப்பட்ட முத்திநிச்சயப் பேருரை கஅ௬ஆம் பிரசுரம். இது றோயல் ௬௭அ பக்கங்களை யுடைய பெரியநூல்.

முத்திநிச்சய மூலத்தை இயற்றி யருளியவர் ஞானபானுவும் தருமபுர ஆதீன ஸ்தாபகருமாகிய குருஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகளாவர். இவர்களுடைய காலத்திலே, ஆன்மாவுக்கு இயல்பாகவே பூரணானந்தம் உண்டென்றும், அது மலத்தினால் மறைக்கப்படுவதென்றும், மலம் நீங்கும்போது அது ஆன்மாவில் விளங்குமென்றும், அது முத்தியிலே சிவபிரானால் அருளப்படுவதன்றென்றும் கூறும் ஆன்மாநந்தவாதிகள் செய்த பிரசாரத்தினாலே பெருந்தீமை விளைந்தது. இக்கொள்கையைக் கண்டித்தற்காக அருளப்பட்டது இந்நூலாகும். இது இருபத்திரண்டுவெண்பாக்களால் ஆக்கப்பட்டது.

இதற்கு மாபாடியஞ் செய்தவராகிய வெள்ளியம்பலத் தம்பிரான் இவ்வாதீனத்திலே முந்நூறு வருடங்களின் முன் விளங்கிய பேரறிவாளர், தமிழ்மொழிக்கடலும் வடமொழிக் கடலும் சங்கமிக்குமிடமாயிருந்தவர் இவர். இவருடைய மாணாக்கருள் ஒருவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். முத்திநிச்சய மூலமாகிய வித்தினை இவர் ஆலமரமாக்கி வைத்தனர். இப்பாடியத்தில் நிறைந்திருக்கும் ஆகமப் பிரமாணங்கள் ஆரிய சமய வாய்மைகளையுடையனவாய்ச் சைவமயத்தின் உட்கருத்தை அறிதற்குப் பெருந்துணையானவை. இதிலே எடுத்துக் காட்டப்படும் மூலாகமங்கள் பதினொன்று. இவற்றுட் பல இக்காலத்தில்லாதன. இரௌரவாகம மேற்கோள்கள் இப்பாடியத்திலே இருபத்தொரு இடங்களிலே காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாகமம் இக்காலத்தில் எங்காயினும் இருப்பதாகத் தெரியவில்லை ஆதலினாலே. இவ்வாகமத்திலே எழுபத்து மூன்றாவது படலமாகிய பாவவிமோசனப் படலத்திலே பன்னிரண்டாவது அத்தியாயமாயுள்ளது சிவஞானபோதம் என்னும் சிவாக்கிரயோகியர் கூற்றைப் பார்ப்பனப் பகைவராகிய தனித் தமிழ்க் கட்சியார் மறுத்தற்குத் தடையொன்றும் இல்லாமற் போயது.

'ஆநந்தமானது அநுபவிக்கப்படுவதொன்றாதலால், அது இயல்பாய் ஆன்மகுணமாதல் பொருந்ாதெதென்பதும், பேராநந்தம் முத்தியிலே இறைவனால் அருளப்பட ஆன்மா அநுபவிப்பதென்பதும், ஆன்மாவுக்கு ஞானக் கிரியா சத்திகள் மாத்திரம் இயல்பாயமைந்துள்ளவை என்பதே சிவாகமம் முதலியன கூறுவ்தொன்பதும்; இந்நூலிலும் உரையிலும் விளக்கப்பட்டுள்ளன. சைவவாய்மைகளை அறிய விரும்புவோர் யாவரும் இந்நூலைக் கற்றல் இன்றியமையாததாம். சு. சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

செய்தார்; நான் கிரமமாகப் படித்து வருடத்தோறும் பரீக்ஷைகளிற் சித்தியடைந்து வந்தேன்; அந்த வித்தியா சாலையி லுள்ள உபாத்தியாயர்கள் என்னிடத்தில் அதிக அன்புகாட்டி வர நானும் அவர்க ளிடத்தில் அதிகம் விசுவாசம் பாராட்டி வந்தேன்; நான் தங்கியிருந்த வீட்டிலுள்ளார் இருவரும், தங்கள் பிள்ளைகளைப் படிப்பித்தற்காக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி விட்டபடியால், என்னை தங்கள் சொந்த மகள் போலப் பாவித்து நடத்தினுர்கள்; நானும் அவர்களை என் தாய் தகப்பன் போற்பேணி நடந்து வந்தேன்; என் பெற்ருர் சில வேளைகளில் சனி ஞாயிற்றுக கிழமைகளில் நானிருக்குமிடத்திற்கு வந்து என்னைப் பார்த்து எனக்கு ஆகவேண்டிய பொருள் பண்டங்களையுந் தந்து, என்னை வைத்து ஆதரிப்பாருக்கும் நன்றி சொல்லிப் போவார்கள்; சிலவேளை வெள்ளிக்கிழமை பிற்பகல் வந்து என்னை இரதத்தி லேற்றித் தங்கள் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய்த் திங்கட்கிழமை அதிகாலையிற் பள்ளிக்கூடத்திலேனும், நான் படிக்கும்படி தங்கியிருக்கும் அந்த வீட்டிலேனும விட்டுச் செல்வார்கள்; இப படியான ஒருமுறை விடுதலை நாட்களில் நான் எங்கள் வீட்டிலேயே இருக்கும்போது, அக்கா, மங்கைப் பருவ மடைந்தேன்; பின்னர் சில வாரம் வித்தியாசாலைக்குப் போகாமல் வீட்டிலே தானே தங்கினேன், பின்னருஞ் சில மாசம் பள்ளிக்கூடத்திலே படித்து அந்த வருட முடிவிற் பிரவேசிக்க வேண்டிய பரீட்சையிற் பிரவேசித்துச் சித்தியடைந்தேன்; அதன் பின்னர் என் பெற்ருேர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புத லின்றி வீட்டிலேயே இருக்கச் செய்தார்கள்.

### "சாந்துணையுஞ் சஞ்சலமேதான்"

வீட்டி லிருந்து சமையல் முதலிய வீட்டுப் பணிகளில் என தாயாருக்குத் துணைபுரிந்து, ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிவுக்குரிய நூல்களையும மற்றை வெளியீடுகளையும தினசரிப் பத்திரிகைகளையும படித்து வந்தேன்; இப்படி யிருக்கும்போதுதான்; அக்கா, யப்பானியர் எங்களுடைய பிரித்தானியர் வசமுள்ள இந்த நாட்டைக் கைப்பற்றுதற்கான யுத்தந் தொடங்கியது; யுத்தமோ எள்ளளவேனுங் காததிராதது, அந்த நேரத்தில் இந்த ஊரிலுள்ள சனங்கள் பட்ட பாட்டையும கொண்ட கலக்கங்களையும இவ்வள வென்று சொல்ல முடியா; இங்குள்ள மக்களுக்கு அந்நாட்களில் ஊணில்லை, இரவில உறக்கமில்லை, மன ஆறுதல் இம்மியத்தனையுமில்லை, எந்த நேரமும மனக்கலக்கந்தான்; "மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச் சாந்துணையுஞ் சஞ்சலமே" என்ற எங்கள் மூதாட்டியின வாக்கை அந்த நேரத்திலேதான் இங்குள்ள நாங்கள் அனுபவத்திற் கண்டோம்; அந்த ஆபத்தான வேளையிலே யாழ்ப்பாணத்து மக்களாய் இந்த நாட்டிலிருந்து ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு அயலிலும் ஒருங்குவந்து இராக் காலங்களிற் சேர்ந்து இந்த ஆபத்திற்கு என்ன செய்வோம் என்று யோசிப்பார்கள்; அவர்கள் எங்கள் வீட்டிற்கும் வந்து என் தகப்பனுரைக் கண்டு எங்கள் ஆபத்திற் கேதுவான நிலைமையைச் சொல்லிக் கவலைப்படுவார்கள்; தகப்பனுர் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவார்; இப்படியாக, நாங்கள் இருக்கும் ஊருக்கு அயலிலேயுள்ள ஊரில யப்பானிய விமானங்கள் வெடிகுண்டு போடத் தலைப்பட்டிருக்கின்றனஎன்றசெய்திகாதிற்படவும்எங்களூரிலுள்ளவர்கள் அடைந்த திகிலை நான் எப்படிச் சொல்லுவேன்! இப்படி யெல்லாம் விபத்துக்கள் நேருகின்றன என்பதை யறிந்துகொண்டும் என் தகப்பனுர் மற்றையவர்களைப் போல் அதிகந் திகிலடையாதவராய், காலையும் மாலையும் தாம் சந்தியா வந்தனஞ் செய்யும்போதெல்லாம் எவ்வகையான இடையூறும் வாராது காத்தருள வேண்டுமென்று எங்கள் குலதெய்வ மாகிய வீரபத்திரக் கடவுளைத் தியானிப்பதும் தோத்திரம் பண்ணுவதுமே செய்து வந்தார்...." என்று தனபாக்கியஞ் சொல்லும்போது, பாக்கிய லட்சுமி அவளைப் பரிவுடன் பார்த்து, "தங்காய், இடையிற் கதையைக் குழப்புகிறேனென்று குறை யெண்ணுதீர், உங்களுக்கு வீரபத்திரக் கடவுள் குலதெய்வமாக வழிபடவந்ததெப்படி" என்று கேட்க, "அக்கா, யாழ்ப்பாணத்திலே நாங்கள் இருக்கும கிராமத்திலே வீரபத்திரசுவாமி கோயில் உண்டென்றும் அந்தப் பெருமானையே குலதெய்வமாகக் கொண்டு அக் கிராமத்திலுள்ள மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வருகிருர்க ளென்றும் என் அப்பர் சொல்லி அந்தப் பெருமானையே எப்பொழுதும் தியானித்து வழிபட்டு வந்தார்" என்றுசொல்லி அப்பாலுஞ் சொல்லுகின்ருள். "இப்படியான நேரத்திலே, ஒருநாள் என் தாயார் தகப்பனுரைப் பார்த்து "ஐயோ, அயலூர் ரெங்கும் யப்பானிய விமானங்கள் வெடிகுண்டு போடுகின்றனவாமே, இங்கும் வந்து சேருமாமே, இங்குள்ள மக்க ளெல்லாம ஒதுக்கிடந்தேடி ஓடிப் போகிருர்களாமே, நாங்கள் மாத்திரம் சுமமாவிருந்து விடலாமோ, எங்கள்பிள்ளை பெரிதும் பயப்படுகிருளே என்றுபதைப்போடு சொல்லுதலும், என் தகப்பனுர் சிரித்து "ஏ, பைத்தியகாரி, எங்கே ஓடியொளித்துத் தப்புவது, நாமாக எங்களுயிரைப் பாதுகாக்க முடியுமென்ரு எண்ணுகின்ருய்? இது நடக்கககூடிய கருமமல்ல, எவ்வுயிருங் காத்தளிக்கும் அந்த இறைவனெருவனே உயிர்களைப் பாதுகாக்க முடியும்; ஆனதனுற்ருன் அவனைப் பசுபதி என்று போற்றுவர் எங்கள் வீரபத்திரன் எங்களைக் கைவிடமாட்டான்; நாங்கள் இன்னமுஞ் சீவனுடன் இருக்கவேண்டு மென்பது நியதியானல் இருப்போம், மாள வேண்டியது விதியானல் மாண்டே போவோம், எங்கே ஓடிப்போகச் சொல்லுகிருய், கிலவிற் கஞ்சிப் பரதேசம் போக முடியுமா என்று ஞானம் பேசினுர்.

### "ஏதோ யோசித்தான்"

ஆனுலும் என் தகப்பனுர் சொன்ன சமாதானங்கள் தாயார் மனசைத் தேறச்செய்தில; தாயார் பின்னருங் கவலைப்பட்டு "எங்களைப்பற்றிக் காரியமில்லை; எங்கள்குடிக கொரேயொரு அருமையான மகளையாயினும் எங்கேனும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைத்தாற் போதும்" என்று தகப்பனுரை வேண்டுதலும், அவர் உடனே ஒரு இரதத்தை ஒழுங்கு செய்து அதில் என்னை ஏற்றி, அந்தச் சாரதி ஒரு சீனன், அவன் எங்களுக்கு அறிமுகமானவன், இந்தப் பிள்ளையைச் சாவதானமாகக் கொண்டு போய்த் தங்கைச்சி முந்திப் படித்த பள்ளிக்கூடத்திற்குச் சமீபமாகவுள்ள அந்த வீட்டிலே கொண்டுபோய் விட்டு, நாங்களும் கூடிய சீக்கிரம் உவ்விடம் வருவோமென்று சொல்லி அவர்களிடம் பிள்ளையை ஒப்புவித்து வா என்று அவனிடஞ் சொல்லி எனக்கும் ஆக வேண்டிய புத்திசொல்லித் தேற்றி விடைதந்து அனுப்பி வைத்தார்கள்; அக்கா, இரதத்தில் ஏறிக்கொண்டு போயினேன், அவ் வீட்டு ஷத்தில் அந்த வீட்டு வாசலில் சேர்ந்தோம், இறங்கி உள்ளே போனேம், எவரையுங் காணவில்லை, கூப்பிட்டுப் பார்த்தோம், பதிலில்லை, திறந்தபடியிருந்த யன்னல் வாயிலாக சானுஞ் சாரதியும்பார்த்தோம், அங்கே எவருமில்லை, எனக்குப் பெரும்பயம் உண்டானது, சரீரம் பதறியது, சாரதியைப் பார்த்து இவர்கள் எங்கோ ஒதுக்கிடந் தேடிப் போயிருக்கிருர்கள், இங்கே நிற்பதாற் பயனில்லை, என்றுசொல்லி மோட்ட ரதத்தில் ஏறிக்கொண்டு இரதத்தை எங்கள் வீட்டிற்குத் திருப்பிக்கொண்டுபோய் என்னை என் பெற்ருரிடம் விடு என்றேன்; அவன்இரதத்தில் ஏறியிருந்து கொண்டு ஏதோ யோசித்தான், ஏன் அப்பா, வீட்டிற்கு இரதத்தை விடச் சொன்னுல் விடுவதற்கு என்ன யோசிக்கிருய் என்று சற்று ஆத்திரப்பட்டுச் சொன்னேன்; ஆம் அம்மா என்று தன் பாஷையிலே அவன் சொல்லிவிட்டு இரதத்தைத் திருப்பி வேகமாகச் செலுத்தினுன்; ஆனுல் இரதம் எங்கள் வீட்டிற்குப் போகும் வழியாற் போகவில்லை யெனக கண்டேன்;மனத்திலே சந்தேகமும் பெருந்திகிலும் உண்டாயின. (வரும்)

# திரு. ச. கண்ணன் அடிகள்

தென்னிந்தியாவைச் சேர்ந்த விருதை நகர் முத்தமிழ்ப் புலவர் திரு. ச. கண்ணனடிகளவர்கள் இந்த இலங்கையிலுள்ள பிரதான பட்டினங்களாகிய கொழும்பு, கண்டி, திருக்கோணமலை முதலிய இடங்களிற் பல அரிய பிரசங்கங்களைச் செய்து ஆங்காங்குள்ள அபிமானிகளின் பெருமதிப்பைப் பெற்றுக்கொண்டு இப்பொழுது சில நாட்களாக இந்த யாழ்ப்பாணத்தின்கண்ணே வந்து தங்கியுள்ளார். சமயாபிமானம் தமிழ்மொழியபிமானம் முதலியனவாய்ந்த இக்கண்ணனடிகளை முதன் முதற் காணும் பேறும், இவர் பிரசங்கத்தைக் கேட்கும் பாக்கியமும் இந்த அக்டோபர்மாசம் 13-ந் தேதி திங்கட்கிழமை மாலை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் எமக்குக் கிடைத்தது ஆங்கு அச்சமயத்தில் பிரசாரகர் பேசிய விஷயம் "மந்திரியாரும் மணிவாசகமும்" என்பதாம்: கண்ணனடிகள் இப்போது முப்பது வயசினர். உற்சாகமான தோற்றமுடையவர்; மகிழ்ச்சியோடு கூடிய முகத்தினர்; அபிமானத்தோடு கூடிய உள்ளத்தினர்; சிறந்த ஆங்கில நூலறிவும், முத்தமிழுணர்ச்சியும் நிரம்பப்பெற்றவர்; கலையாராய்ச்சியாளர்; நுண்ணறிவுற்றவர், விபரீத கொள்கையற்றவர்; தெய்வத்திலே திடபத்தி பூண்டவர்; உள்ளதையுள்ளபடி அஞ்சாதெடுத் துரைக்குந் துணிவு பூண்டவர்; பிரசங்கங்கள் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய சிறப்புக்களோடு கூடியனவாய், நவரசமுஞ் செறிந்தனவாய் பசுமரத்தாணி போல் கேட்டாருள்ளத்திலே தெள்ளிதிற் பதிவனவாய், பள்ளிச் சிறுவரும் கல்லாத மாந்தரும் விளங்கிப் பயனடையும் பான்மையனவாம், உள்ளக் கிளர்ச்சியை உதவுவனவாய், இன்ன பல நலன்களோடு கூடியனவா யுள்ளன. சென்ற புதன்கிழமைபம மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. கண்ணனடிகள் 'அருணகிரியும் அறுமுகனருளும்" என்னும் விஷயமாக ஒரு சிறந்த பிரசங்கத்தைப் டன்னூற்றுக்கணக்கான ஆடவர் மகளிர் பள்ளிக்கூட மாணவர் முன்னிலையிற் செய்தனர். வாலிபர்கள் விபரீதமும் நாஸ்திகமும் பேசிப் பழைய சமயக் கொள்கைகளுக்கும் ஆசாரங்கட்கும் மௌட்டிகங் கற்பிக்கும் இக்காலத்தில் எங்கள் கண்ணனடிகள்போன்ற வாலிபரின் பிரசங்கம் பெரும் பயன் பயக்குமென்பது நிசம்; யாழ்ப்பாணப் பெரும்பிரிவிலுள்ள ஏனைய ஊர்களிலும் இம்முத்தமிழ்ப் புலவரையே உபசரித்தழைத்துச்சென்று, ஆங்காங்கு வசிக்கும் மக்கள் நல்ல நல்ல பிரசங்கங்களைச் செய்வித்துக் கேட்டுப் பயனடைகின்ருர்கள்; இவ்வடிகள் இன்னுஞ் சில தினம் யாழ்ப்பாணத்திலே தங்கியிருத்தற்கு உத்தேசித்திருத்தலால், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல்வேண்டு மென்ருங்கு, சமயத்தைத் தவறவிடாது இவர்வாயிலாக நல்ல விஷயங்களைக் கேட்டுப் பயனடைந்து, செவிச்செல்வத்தைத் தரும் இவரை நன்கு சம்மானித்தல் முறையாகும்.

# "செனேற்" சபையினர்

## 15 பேர் தெரியப்பட்டனர்

இலங்கைப்பாராளுமன்றத்துமேற் சபைக்குக் கீழே கூறப்படும் 15 பேரும் பிரதிநிதிகள் சபையினல் நேற்றைத் தினம தெரிவு செய்யப்பட்டனர்.

**ஐ. தே. கட்சி**

ஸ்ரீமான்கள், ஸிரில் டீ. சொயிஸா, ஆர். எப். டீ எஸ். மெல், எஸ். ஏ. விஜயசிங்ஹ, ஜஸ்ரின் கொத்தலாவலை, ஏ. ஆர் ஏ. ரூஸிக். பார்ண்ஸ் றத்வத்த டபிள்யூ. ஏ. பி. சொயிஸா, டக்ரர் எம். ஜி பெரீரா, ஸ்ரீமதி மொலமூரே.

**சமசமாஜக் கட்சி**

மிஸ்ரர் டபிள்யூ. கே. ஜீனதாஸ

**போல்ஷெவிக் லெனின்கட்சி**

மிஸ்ரர் டீ. டபிள்யூ ஜே. பெரீரா

**சமதர்மக் கட்சி**

மிஸ்ரர் எல். பீ. ஜெயசேன

**இந்தியக் காங்கிரஸ்**

ஸ்ரீ பெரிசுந்தரம்

**தமிழ்க் காங்கிரஸ**

டக்ரர் ஈ. எம். வீ. நாகநாதன்

**சுயேச்ஸை**

ஸ்ரீ சோ. நடேசன் (நியாயவாதி)

## தேகவியோகம்

நிகழும் சர்வசித்து வருஷம் புரட்டாதி மாசம் 17-ந் திகதி (2-10-47) குருவாரத்தன்று பண்டிதர் சி. கந்தவனம் அவர்களின் தாயார் பொனி கண்டியிலிருக்கும் தமது இல்லத்தில் சிவலோகப் பிராப்தியாயினர். இவர் ஆன்மா சாந்தியடைவதாக. —கடித

## தானவரவு

வண்கிழக்கு கந்தர்மடம் திரு. வா. கந்தையா அவர்களின் அந்தியேட்டிப்போது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 2 சதம் 50 வரப்பெற்றேம்,

மனேஜர்
இந்துசாதனம்

## கோலாலம்பூர் றேடியோவில் சங்கீதக் கச்சேரி

மேற்படி றேடியோ நிலயத்திலிருந்து அக்டோபர் 20-ந் தேதி (20-10-47) 30-ந் தேதி (30-10-47) ஆகிய இரு தினங்களிலும் இரவு மலாயன்நேரம் 9.30 மணி தொடக்கம் திருச்செல்வி கு. விக்னேஸவரி (உரும்பராய் த குமாரசுவாமி - கொந்துருத்துக்காறர் - இம்பிரூேட்டு அவர்களின் புதல்வி) வாய்ப்பாட்டுப் பாடுவார்.

த. குமாரசுவாமி
8—10—47

Mis 158 17-10-47


## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பிறுங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி அக்டோபர் 18

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் வி கோமதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 8-30 காலைஇசை இசைத்தட்டு 9 முடிவு.

1 திருக்கோடிகாவல் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆங்கிலத்தில் செய்திகள் 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 பி வெங்கடாரமய்யர் பாட்டு 2-45 முடிவு

மாலை 5 பி வெங்கடராமையர் பாட்டு 5 40 திருமொழி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எஸ் வி கோமதி பாட்டு 7-15 சொல்லம்பு பத்திரிகைகளில் 7-30 தமிழில் செய்திகள் 7-45 த்வாரம் வெங்கடசாமி நாயுடு வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலத்தில் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 வி வேணுகோபால் கிளாரினெட் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

ஞாயிறு அக்டோபர் 19

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வத்ராயிருப்பு வி மீனும்பாள் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 டி எஸ் ஷண்முகசுந்தரம்பிள்ளை பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12-20 பூம்பொழில் முகப்புச் சித்திரம் 12-35 கிடைக்காத கடிதங்கள் 12-45 சொக்கட்டான் இசைநிகழ்ச்சி 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 ஒலிமலர் முடிவு.

மாலை 5 சாரதா அனந்தராமன் பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 வத்ராயிருப்பு வி மீனும்பாள் காட்டு 7-30 தமிழில் செய்திகள் 7 45 புத்தக விமர்சனம் 8 டி எஸ் ஷண்முகசுந்தரம்பிள்ளை பாட்டு 8-30 சாரதா அனந்தராமன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சாந்தா ஆப்தே இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 எஸ் எஸ் பரமசிவம்பிள்ளை பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

திங்கள் அக்டோபர் 20

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஏ ஸ்ரீநிவாசன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 ஆர் எஸ் முத்து பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஆர் எஸ் முத்து பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எஸ் ஆர் முத்து பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 ஏ ஸ்ரீனிவாசன் நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஆர் சுப்பிரமணியம் பாட்டு 7-30 தமிழில செய்திகள் 7-45 உழவர்க்குத் துணை 8 ஆர் சுப்பிரமணியம் பாட்டு 8 30 இசைக்கதம்பம் டுடல்வி அஞ்சல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரலவகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 கடத்தூர் சங்கராமய்யர் வீணை 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

செவ்வாய் அக்டோபர் 21

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருச்சி ஏ தாமஸ் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8-30 வி காசி ஐயர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 திருச்சி ஏ தாமஸ் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 வி காசிஐயர் புல்லாங்குழல் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 காப்பிய ஆசிரியர் இலக்கிய வாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7.45 பாலக்காடு ராமபாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே ஜே ஜோஸ் தில்ருபா 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

## வரவுசெலவுத் திட்டம்

### மந்திரியாரின் முதல் வேலை

அடுத்த மாதம் புதிய பாராளுமன்றம் வெகு ஆடம்பரத்துடன் அங்குரார்ப்பணம் செய்யப்படும். அதற்கடுத்தமாதம் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்யும் வேலையில் மந்திரசபை ஈடுபடும்.

இலங்கையின் வரவையும் செலவையும் வருகிற ஆண்டிற் சரிப்படுத்துவது லேசான கருமமல்ல என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

நிதி மந்திரி மிஸ்ரர் ஜே. ஆர். ஜெய்வர்த்தன, பொதுஜனங்கள் உபயோகிக்கும் வாழ்க்கைக்கு அத்தியாவசியகமான பொருள்கள்மீது இன்னும் இறக்குமதி வரியை அதிகரிப்பதை விரும்பவில்லை. நேர்மாறாக, அப்பொருள்கள்மீதுள்ள இப்போதைய வரியைக் குறைத்துவிடவேண்டுமென்று அவாப்படுகிறாராம். மோட்டர்கார், குடிவகை, சிகரற், புகையிலை முதலாம் புலநுகர்ச்சிப் பொருள்கள்மீதுள்ள இறக்குமதி வரியையே இன்னும் அதிகரிக்கவேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கிறார். இன்னும் வருமானவரி விகிதமும் கூட்டப்படலாம்.

## தேசீயக் கொடியல்லவாம்

### மிஸ்ரர் சேனநாயக்காவின் விளக்கம்

சிங்கக்கொடி இலங்கையின் தேசியக் கொடியல்ல; அது சிங்களரின் கொடி என்று மிஸ்ரர் சேனநாயக்கா சென்றவாரம் கொழும்பு ரைம்ஸ் பத்திரிகையின் நிருபர்க்குக் கூறினார். இப்போது இலங்கையின் தேசியக் கொடி பிரிட்டிஷாரின் "யூனியன் ஜாக்" தான். எப்படியான தேசியக்கொடி இலங்கைக்கு வேண்டுமென்பது இனி நிர்ணயிக்கப்படும் என்று அவர் மேலும் கூறியிருக்கிறாராம்.

## இந்திய இலங்கைப் பிரச்சினை


### தீர்த்துவைக்க திரு சேனநாயக்கா ஆவல்

இலங்கை இந்திய பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்து வைக்க மிஸ்ரர் சேனநாயக்கா மிகவும் ஆவலுடன் இருக்கிறார் என்று கொழும்பு ரைம்ஸ் பத்திரிகையின் அரசியல் நிருபர் தெரிவிக்கின்றார்.

சென்ற புதன்கிழமைதான் புதிய மந்திரி சபை தனது கருமத்தை ஆரம்பித்திருக்கின்றது இந்திய அரசாங்கத்துடன் இவ் விஷயத்தில் தொடர்பேற்படுத்தி இப் பிரச்சினையைக் கூடிய சீக்கிரத்தில் தீர்க்க இன்னும் சில தினங்களில் மந்திரி சபை முயற்சி செய்யுமாம்.

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

உங்கள் சங்கீதக் கருவிகள்
பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானல் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய்
பழுதுபார்த்துத் தருகிறோம்
[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]
கஸ்தூரிமோகன்புளூட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K. K. S. றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47. (F)

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std.29 1-8—30 7-48)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Friday, October 17, 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org